விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 ஆவணி 1 ஜுல்ஹஜ் 29 இதழ் 188
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 17-8-1985

### ஓய்வூதியம் இன்று இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். பொலிஸ் பிடுதியில் உள்ள வங்கிக் கிளைகளில் இன்றும் நாளையும் 17ம், 18ம்

(8-ம் பக்கம் பார்க்க)

### சவர்க்காரம் விலை குறைகிறது

(கொழும்பு)

சவர்க்காரத்தின் விலையை உடனடியாகக் குறைக்குமாறு வர்த்தக அமைச்சர் திரு. அமரசிறி பணித்துள்ளார்.

தேங்காய் எண்ணெய் விலை குறைந்திருப்பதனாலேயே சவர்க்காரத்தின் விலையைக் குறைக்குமாறு அமைச்சர் சவர்க்காரத் தயாரிப்பாளர்களைக் கேட்டுள்ளார்.

### எம். ஜி. ஆரின் முக்கிய பிரச்னை இதுதான்!

(நியுயோர்க்)

"எனது நம்பர் 'ஒன்' பிரச்னை இலங்கைத் தமிழ் மக்கள் பிரச்னை தான்." என்று தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

நியுயோர்க்கில் நடைபெற்ற செய்தியாளர் மகாநாட்டில் நிருபர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கை

(8-ம் பக்கம் பார்க்க)

● கண்ணிவெடியின் எதிரொலி

# வவுனியா கோரச்சம்பவம்: அங்குமிங்குமாக சடலங்கள்!

## ஒரு மணிநேர துப்பாக்கி வேட்டுகளினுல் நகர் கிடுகலங்கியது

(அலுவலக நிருபர்)

**வவுனியாவில், ஆயுதப் படையைச் சேர்ந்த முகாம் ஒன்றுக்கு முன்பாக உள்ள சிறிய மதகு ஒன்று கண்ணிவெடி வைத்துத் தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்து இடம்பெற்ற ஆயுதப்படையினரின் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் பொதுமக்களில் அதிகமானேர் கொல்லப்பட்டனர்! பலர் படுகாயமுற்றனர்! வீடுகள் சில எரிக்கப்பட்டன!**

நேற்று அதிகாலை 5-15மணியளவில் பயங்கர சத்தத்துடன் இக்குண்டு வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

அதேசமயம் ஒரு மணித்தியாலத்துக்குமேல் தொடர்ந்து பரவலாகத் துப்பாக்கி வெடிச் சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன வவுனியா நகர் கிடுகலங்கியது.

ஒரே அவலக் குரல்கள். மக்கள் நாலா பக்கமும் சிதறிஓடி காட்டுக்குள் பதுங்கிக்கொண்டனர். வீடுகளுக்குள் அகப்பட்டவர்கள் துப்பாக்கிச்சூட்டுக்கு இரையானர்கள் சிறுவர்-சிறுமியர்-ஆண்கள்-பெண்கள்-வயோதிபர்கள் என்று இனங்காணப்படாமல் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

## "இதுதான் கடைசித்தடவை:" இப்படி ரொமேஷ் கூறினுர்

(கொழும்பு)

"இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக எந்தவிதமான ஆலோசனையையும் நடத்த நான் இலங்கை வருவது இது தான் கடைசித் தடவை."

இவ்வாறு, இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரி இலங்கை சிரேஷ்ட அமைச்சர் ஒருவரிடம் 'வாய்விட்டு'க் கூறினுராம்!

அண்மையில் திரு ரொமேஷ் பண்டாரி கொழும்பு வந்திருந்த போது, இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக பல்வேறு தலைவர்களையும் சந்தித்து ஆலோசனை நடத்தியது தெரிந்ததே.

"நான் பல்வேறு தலைவர்களையும் சந்தித்து அவர்களின் எண்ணங்களைத் தெரிந்து கொண்டேன். பொதுவாக மதத் தலைவர்களும். பொது ஸ்தாபனங்களின் தலைவர்களும் பிரமுகர்களும் எப்படியும் இப்பிரச்னை தீர்க்கப்படவேண்டும் என்று விரும்புகின்றனர் என்னிடம்இதுகுறித்து வலியுறுத்தினர். ஆனல் சில அரசியல் தலைவர்கள் மட்டும் இப்பிரச்னை தீர்க்கப்படுவதை சிறிதளவும் விரும்பவில்லை" என்று திரு. ரொமேஷ் பண்டாரி அந்த சிரேஷ்ட அமைச்சரிடம் மனம் விட்டுக் கூறினுராம்.

## 'வரிசையாகநிறுத்திசுட்டனர்'

"எனது குடிசைக்கு வந்து என்னையும் எனது இரு பிள்ளைகளையும் வயதுபோன தாயாரையும் வரிசையாக நிறுத்தி விட்டுத் துப்பாக்கியால் சுட்டனர் என் கண்முன்பாக அவர்கள் துடிதுடித்துச்செத்தனர் ஐயோ எங்களைச் சுட வேண்டாம் என்று கதறியும் அவர்கள் கேட்கவில்லை"

வவுனியாவில் நேற்று அதிகாலை நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்து உயிர்தப்பிய

(8ம் பக்கம் பார்க்க)

## பொலிஸ், இராணுவம் மீது பீரங்கித் தாக்குதல்!

### 10சிங்களவர்கடத்தப்பட்டனர்?

(திருகோணமலை)

உதவி அரசாங்க அதிபருக்கும், பொலிசாருக்கும் பாதுகாப்பாகச் சென்ற இராணுவத்தினர் மீது தமிழ்த் தீவிரவாதிகளால் பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டதாக அரச தரப்பில் நேற்று தெரிவிக்கப்பட்டது

நிலாவெளிப் பகுதியில் நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக அரசு தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

"நிலாவெளிப் பகுதியில் பத்து சிங்களவர்கள் கடத்திச் செல்லப்பட்டதாக வெளிவந்த செய்தியைத் தொடர்ந்து மேற்படி சம்பவம்சம்பந்தமாக விசாரணை மேற்கொள்ள திருகோணமலை மாவட்ட உதவி அரசாங்க அதிபரும், பொலிசாரும் சம்பந்தப்பட்ட இடத்திற்கு சென்றனர். அவர்களுக்கு உதவியாக இராணுவத்தின

(5-ம் பக்கமும் பார்க்க)

### லலித் லண்டன் பயணம்

(கொழும்பு)

தேசியபந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி நேற்றிரவு லண்டன் பயணமானர். [ரா]

### கண்ணிவெடி: ஒருவர் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் நேற்றுவீதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடி வெடித்ததினல், குடிமக்கள் பிரயாணம் செய்த கார் ஒன்று பலத்த சேதத்துக்குள்ளானதாகவும், அதில் பிரயாணம் செய்த பிரயாணி ஒருவர் பலத்த காயமடைந்ததாகவும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அந்த வழியே செல்லவிருந்த பந்தோபஸ்து படைகளின் வாகனத்திற்குஇலக்குவைத்தே அக்கண்ணிவெடி புதைத்து வைக்கப்பட்டிருந்ததாக அச்செய்தி மேலும் கூறியது.

இச்சம்பவம் மட்டக்களப்பிலிருந்து 21 மைல் தூரத்தில் உள்ள வெல்லாவெளி என்னுமிடத்தில் நடந்துள்ளது. (ரா)

### குண்டு வெடித்து ஒருவர் பலி

[மண்டைதீவு]

சரம்பனில் குண்டு ஒன்று வெடித்ததில் ஒருவர் பலியானர்! மற்றெருவர் தமது இரண்டு கைகளையும் இழந்தார்!

வீட்டு வளவில் குப்பைஒன்றுக்கு அருகில் இந்தக் குண்டு கிடந்ததாகவும், இதனை இவர்கள் ஏதோ பொருள் என்று எண்ணி எடுக்க முற்பட்ட வேளையில் இது வெடித்ததாகவும் கூறப்படுகிறது

## திருமலையிலிருந்து தமிழர் வெளியேறமுடியாது தவிப்பு!

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள சிங்கள மக்கள், வெளியேறிக் கொண்டிருக்கும் அதே நேரத்தில்அங்கு வாழும் தமிழ் மக்கள், அங்கிருந்து வெளியேறிப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல வழியின்றித் தவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது

திருமலை நகரத்தில் பெரும்பாலான மக்கள் வெளியேறியுள்ளனர். இவர்களில் தமிழ் மக்கள் மட்டக்களப்பிற்கும், யாழ்ப்பாணத்திற்கும் சென்றுள்ளனர்

ஒருவாரத்திற்கு முன்னர் இனந்தெரியாத இளைஞர்கள் நகரில் உள்ள தமிழ்மக்களை உடனடியாக வெளியேறுமாறு கூறியதாகத் தெரியவருகிறது.

நகரிலுள்ள மக்களை தங்களால் பாதுகாக்க முடியாதென்றும், மூன்று மைல்களுக்கு அப்பால் செல்லுமாறும் அவர்கள் கூறியதாக

(8-ம் பக்கம் பார்க்க)

### 86 பொலிஸாரின் இடமாற்றம் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து இடமாற்றம் பெற்ற 86 பொலிஸாரின் இடமாற்றமும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

தங்கள் இடமாற்றங்களை மீண்டும் பரிசீலனை செய்யுமாறு பொலிஸார் மேலிடத்திடம் கோரியிருந்தனர். (ஈ)

### 2000 திருமலைத் தமிழர்கள் மட்டக்களப்பில் தஞ்சம்

(கொழும்பு)

திருகோணமலையிலிருந்து பல தமிழ்க்குடும்பங்கள் அகதிகளாக மட்டக்களப்புக்கு சென்றுள்ளன.

நேற்று 40 குடும்பங்கள் மட்டக்களப்புக்கு சென்றன. ஏற்கனவே அங்கு 2000 திருமலை அகதிகள் இருப்பதாகக்கூறப்படுகிறது. (பெ)

# விளம்பரம்

## விற்பனைக்கு

எம்மிடம் சிறந்த மாட்டு எருவும். இரண்டு சிறந்தஇன காளைக் கன்றுகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: பொதுமுகாமையாளர் நல்லூர்த் தொகுதி அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். 83.

யாழ்ப்பாணம் கே. கே. எஸ் வீதியில் இருந்து 150 யார் தூரத்தில் பிரப்பங்குளம் வீதியில் அமைந்துள்ள 3 கடை கட்டிடங்களும் ஸ்ரோர்ஸ்ரூம் (சீமெந்து மேற்கூரையுடன்) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: பா. தவபாலன், சட்டத்தரணி இல. 185/4 கில்னர் லேன், கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். தொடர்பு கொள்ளும் நேரம்: தினசரி மத்தியானம் 12-00ல் இருந்து பி. ப. 4-00 வரை. 30

மினி சினிமாவுக்கு உரிய 45 பைப் கதிரைகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- செ. கோபாலு, மெயின்வீதி, சங்கானை. 57

கண்டி வீதியில் அரியாலை நெடுங்குளம் சந்திக்கு அருகாமையில் கடையும் வீடும் கட்டக்கூடிய இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. மே/பா முத்துக்குமார் ஆசாரி, 501, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (4885)

புதிய G. E. C. Air Condition Plant (17000 B.T.U.), 45 இரும்புக்கதிரைகள், மினி தியேட்டருக்கு உகந்த T. V. Lens, Hitachi Vedeo Camera (Auto Focus) உடன் விற்பனைக்குண்டு. சாயி ரெலிரேப், அச்சுவேலி, போன்: 23759. (75)

குரும்பசிட்டி பிரதான பஸ் தரிக்கும் சந்தியிலிருந்து தெற்குப்புறமாக 200 யார் தூரத்தில் றோட்டுக்கு அருகில் மேற்குப் பக்கமாக வீடு கட்டுவதற்கு உகந்த பத்துப் பரப்புக் காணி பிரித்தோ அல்லது முழுமையாகவோ விற்பனைக்குண்டு. தொடர்பு; க. முத்துக்குமாரு, அல்லது வ. குமரேசன், 106, கோயில் வீதி, (கயிலாயபிள்ளையார் கோயிலுக்கு அருகாமை) நல்லூர், யாழ்ப்பாணம். 19

## தேவை

நல்ல இரசக் கொப்பரு 1 கிலோ 2/- ரூபாய்ப்படி கொள்வனவு செய்கின்றோம். சி. எஸ். கே. மில், யாழ்ப்பாணம். 49

நாவற்குளி கண்ணாடி தொழிற்சாலை உற்பத்திப் பொருள்களுக்கு நிறம் தீட்டவும், புறொஸ்ரிங் (Frasting) செய்யவும் அனுபவம் வாய்ந்த சிறந்த தொழிலாளர்கள் தேவை. 30-8-85-க்கு முன் விண்ணப்பிக்கவும். வெனின்சுலா கண்ணாடி தொழிற்சாலை இல. 9, கண்டி வீதி நாவற்குளி. 84

## அடையாளம் காணப்பட்டார்

(வவுனியா)

வவுனியா ஆஸ்பத்திரிபிரேத சாலைக்கு முன்கிடந்து கண்டு பிடிக்கப்பட்ட இளம் பெண்ணின் சடலம் அடையாளம் [7-ம் பக்கம் பார்க்க]

---

## யாழ்ப்பாண அக்கடமி

க. பொ. த. உயர்தர பரீட்சை

### ஆகஸ்ட் 1986 மீட்டல் வகுப்புகள்

க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு ஒருமுறையாவது தோற்றிய எவரும் இந்த மீட்டல் வகுப்புகளில் சேரலாம். பாடத்திட்டம் முற்றாக மீட்டல் செய்யப்படும். சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் உள்ள விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்கவும்.

வகுப்புகள் 9-9-85ல் ஆரம்பமாகின்றன.

பல்கலைக்கழக அனுமதிக்கு எமக்கூடாக பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் அநேகர் ஒவ்வொரு வருடமும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இது எமது திறமைக்குச் சான்றாகும்.

அதிபர்,
376, பிரதானவீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 22617

(4983)

---

## St. John's College, Jaffna

COURSE IN AUTOMOBILE ENGINEERING

Closing date for applications for above course is extended to 6th September, 1985.

Course syllabus covers relevant IMI and City and Guilds examinations eventually leading to external registration in London as TECHNICIAN ENGINEER (CEI), with world-wide recognition.

Interested students with requisite qualifications may apply before extended closing date. Students who have already applied need not apply again.

Further details from College office.

PRINCIPAL.

Main Street,
Chundikuli,
Jaffna.
17th August, 1985. (29)

---

## ஓர் உருக்கமான வேண்டுகோள்

இம்மாதம் (01-08-1985) வியாழக்கிழமையன்று மாலை 7 மணிக்கு ஓமந்தையைச் சேர்ந்த நொச்சிமோட்டை வீதியால் 140 மூடை தவிட்டுடன் யாழ். நோக்கி வந்த எனது

### இசுசு ELF 40 ஸ்ரீ 3754

இலக்கமுடைய லொறியை

இனந்தெரியாத வாலிபர்களால் தடுத்து நிறுத்தி தவிட்டு மூடைகளை வீதியருகே இறக்கி வைத்துவிட்டு மறுதினம் காலையில் வாகனத்தை தருவதாக உறுதிசொல்லிச் சென்றவர்கள் இதுவரை திருப்பித் தரவோ பதில் சொல்லவோ இல்லை. இதற்கு முன் வன்முறைச் சம்பவங்களால் பாதிப்புற்று சொல்லொணாக் கஷ்ட நஷ்டங்களடைந்து தாங்கொணாத் துயரடைந்துள்ளோம். சம்பந்தப்பட்டவர்கள் மனிதாபிமானத்துடன் கருணை கூர்ந்து லொறியை தந்துதவுமாறு மன்றாட்டமாக வேண்டுகின்றேன்.

அ. நந்தகுமார்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

பழக்கடை,
நொச்சிமோட்டை,
ஓமந்தை. (80)

---

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

மணமகன்:
**செல்வன் கணேசராஜா**
(ஆசிரியர், கொழும்பு தொண்டர் வித்தியாலயம்)
மணமகள்:
**செல்வி வசந்தமாலா**
(ஆசிரியை, ஓமந்தை மகாவித்தியாலயம்)
இடம்:
மணமகள் இல்லம்
காலம்:
19-08-1985 திங்கட்கிழமை நண்பகல் 12-00 மணி
வரவேற்பு:
20-08-1985 மணமகன் இல்லம்
உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. / திருமதி
செ. தில்லைநாதன்,
(இளைப்பாறிய அதிபர்)
துவாரகை,
உடுவில்தெற்கு,
சுன்னாகம்.

திருமதி
வ. அரியரத்தினம்,
(ஆசிரியை)
யாழ். / வண். நாவலர் ம. வி.
'சண்முகவாசா',
62/2, இந்துக்கல்லூரி லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(69)

---

## இன்றைய பலன்

மாதம்—ஆவணி
திகதி—1(17-8-1985)
கிழமை—சனி
திதி—பிரதமைபி. ப. வரை
நக்ஷத்திரம்—மகம் பி. ப. வரை

மேடம்:- உயர்ந்த எண்ணங்கள் புகழின் உச்சத்திற்கு அழைத்துச் செல்லும் பிதா வழியால் நற்செய்தியும் கிடைக்கும்.

இடபம்:- புதிய தொழில் முதலீடு செய்வீர்கள். கூட்டு வியாபாரத்தால் சிந்தனை உருவாகும் சிலரது கவனம் திசை திருப்பப்படலாம்.

மிதுனம்:- வணிகத்துறையில் முன்னேற்றம் காணப்படும் நீண்ட நாள் கொடுக்கல் வாங்கல் நிவர்த்தியாகும். வரவேற்கத்தக்க நாள்.

கடகம்:- எக்கருமத்தையும் எண்ணித்துணிக அவசரப் போக்கினால் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும்.

சிங்கம்:- இன்னலின் பின்னல் உங்கள் முன்னேற்றத்தைத் தடுக்கும். இதயம் வேதனைப்படும். திட சித்தம் வேண்டும்.

கன்னி:- கனிவான நினைவுகளில் மூழ்கிப் போவீர்கள் குடும்பத்தில் மகிழ்ச்சி பிறக்கும்; நீண்டநாள் அபிலாஷை இன்று நிறைவேறும்.

துலாம்:- குடும்பத்தில் குறை கேட்க நேரிடும். மறைமுகமாக நடத்திய காரியம் ஒன்று இன்று அம்பலமாகும். பொறுமையே நன்று

விருச்சிகம்:- அறவழியில் நாட்டம் பிறக்கும். எதிர் பார்த்த காரியம் ஒன்றுக்கு வழிகோலப்படலாம்.

தனுசு:- இதயத்தில் இனிமை துள்ளும் வியாபார விருத்தியும் உண்டு. பரந்த நோக்குடன் செயற்பட்டால் பாராட்டும் கிடைக்கும்.

மகரம்:- இடர்கள் பல தாக்கும் இதயத்தில் எரிமலை குமுறும். உதவிசெய்யப்போய் உபத்திரவத்தையும் அணைத்துக் கொள்வீர்கள்,

கும்பம்:- கட்டி வெல்லம் போல் இனிக்கும் வாழ்க்கை. பசுமையான நினைவுகள் நெஞ்சில் அலைமோதும் இல்லற வாழ்வில் இணைப்புகள் இறுகும்.

மீனம்:- நண்பர்களுடன் கருத்து வேற்றுமை உருவாகும் வியாபாரிகளுடன் பகைத்துக் கொள்ளவேண்டாம்,

திருமலை
– வே ரவீந்திரன் –

---

## முதல் வருட நினைவு

1985 ஆவணி 17
திருமதி மொனிக்கம்மா பாக்கியநாதர்



மண்ணுலகில்
மந்தருடன்
1925 வைகாசி 26

மெய்விவாகம்
1943 ஐப்பசி 23

விண்ணுலகில்
மாவேந்தனுடன்
1984 ஆவணி 17

அன்னாரின் ஆன்மசாந்திக்காக மடுத்திருப்பதியிலும், நேற்றுதீவு புனித யூதாததேயு ஆலயத்திலும், யாழ். பரிசுத்த புதுமைமாதா ஆலயத்திலும் நிகழாண்டு ஆவணித்திங்கள் பதினேழாம் நாள் சனிக்கிழமை பிற்பகல் 5-00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப் படும்.

வே. பாக்கியநாதர் குடும்பத்தினர்.

'தமிழ்',
13, புதுமைமாதா கோவில் கிழக்கு வீதி,
யாழ்ப்பாணம். (87)

---

17-08-1985 சனிக்கிழமை

## 31-ம் நாள் நினைவஞ்சலி

### அமரர் கந்தப்பு கணபதிப்பிள்ளை

காரைநகர்

மண்ணுலகு:
12-02-1911

விண்ணுலகு
18-07-1985



எம்மை பேரன்புடன் பேணிக்காத்து
வளர்த்த அன்புத் தெய்வமே!
எமது குடும்ப விளக்காய் —
ஒளிச்சுடராய் ஓமந்தைவரை பிரகாசித்து
எம்மையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்தி,
இறைவன் பாதங்களைத் திடீரென எய்திய
தங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

திருமதி க. விசாலாட்சியும்,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளும்.
எண்ணெய்கப்பிட்டி, தங்கோடை, காரைநகர். (93)

## தென்னாபிரிக்க கறுப்பர் மீதான புதிய மாற்றங்கள்:

# அதிபர் போத்தாவின் அறிவிப்பில் அதிருப்தி!

### "நாடு எரியும்போது வாக்கு கேட்பதை ஒத்தது"

— வண. டுட்டு

டேர்பன், ஆக 16

தென்னாபிரிக்க அதிபர் திரு. பி. எம். போத்தா கறுப்பினத்தவர்கள்மீதான தமது அரசின் புதிய நடவடிக்கைகள்பற்றி நேற்று நாட்டு மக்களுக்கு அறிவித்தார். இந்த அறிவிப்பு பல புதிய அம்சங்களை உள்ளடக்கியுள்ள தென தென்ஆபிரிக்க வெள்ளையர் அரசு கூறியுள்ளது. ஆயினும் நாடு எரியும்போது ஒரு அரசியல்வாதி வாக்குக் கேட்பதுபோல இந்த அறிவிப்புக் காணப்படுவதாக கறுப் பினப் பிரமுகர் வண. டெஸ்மன்ட்டுட்டு கருத்து வெளியிட்டுள்ளார்.

திரு. போத்தாவின் இந்த அறிவிப்பு தென்னாபிரிக்க அரசியல்வாதிகள் உட்பட உலக நாடுகள் பலவற்றினாலும் மிக ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டது. பல நாடுகள் இந்த அறிவிப்பை ஒலி-ஒளிபரப்பின

திரு. போதகா கூறியிருப்பதாவது:"தென்னாபிரிக்க இனப் பிரச்னையை முற்றிலும் தென்னாபிரிக்க அரசாங்கமே தீர்த்து வைக்க விரும்புகின்றது இப்பிரச்னை வெளிநாட்டுத் தலையீடுகளினாலோ அல்லது உள் நாட்டின் நெருக்குதல்களினாலோ தீர்க்கப்படுவதை தென்னாபிரிக்க அரசு அனுமதிக்காது.

தென்னாபிரிக்காவில் ஒரு பொதும் புரட்சி அரசாங்கமொன்று அமைப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது

கறுப்பினத்தவர்கள் அவர்களது சொந்த இடங்களில் இருக்க அனுமதிக்கப்படுவார்கள் ஆயினும் அவர்களுக்கு அவ்விடங்களில் சுதந்திரமான அரசியல் நடவடிக்கைகளைமேற்கொள்ள இடமளிக்கப்பட மாட்டாது.

ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற முறை ஏற்கப்பட முடியாததொன்றாகும் இத்தகைய நிலைமை பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் (தென்னாபிரிக்காவில் வெள்ளை இனத்தவர்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வாக்களிக்கும் உரிமை உண்டு )

கலப்பினத்தவர், வெள்ளையர்கள், இந்தியர்களுடன் பெரும்பான்மையினரான கறுப்பினத்தவருக்கும் ஒரு நான்காவது பிரிவை பாராளுமன்றத்தில் ஏற்படுத்த முடியாது'' என்றார்

கறுப்பினத்தவரின் பிரதான இயக்கமான 'ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்' தலைவர் திரு. நெல்சன்மண்டலே குறித்தும் திரு. போத்தா பிரஸ்தாபித்தார்.

வன்முறைகளைக் கைவிடுவது என்று திரு. மண்டலே உறுதியளித்தால் மட்டுமே அவர் விடுதலை செய்யப்படுவார் என்று போத்தா கூறினார்.

திரு. போத்தாவின் இந்த அறிவிப்பை தென்னாபிரிக்கக் கறுப்பினத்தவர்கள் அர்த்த மற்றதொன்றென வர்ணித்துள்ளனர்.

தென்னாபிரிக்க கறுப்பினப் பிரமுகரும் நோபல்பரிசு பெற்றவருமான வண. டெஸ்மன்ட் டுட்டு இதுபற்றிக் கூறியதாவது: கறுப்பர்கள் நலன் தொடர்பான முக்கிய அறிவிப்பு என்று இது தெரிவிக்கப்பட்டது. ஆனால் இதில் எதுவும் முக்கியமானதாகவோ, குறிப்பிடத்தக்கதாகவோ காணப்படவில்லை.

இதுகுறித்து சிறப்பாகக் கூறுவதானால் 'நாடு எரியும்போது ஒரு அரசியல்வாதி வாக்குக் கேட்டுப் பிரசாரம் செய்வது போல் இது அமைந்திருந்தது எனலாம்' என்றார்.

போத்தாவின் அறிவிப்பைச் செவிமடுத்த பல உலகநாடுகளும் இது ஒரு அர்த்தமற்ற தொன்றென்றே அறிவித்துள்ளன. (இ)

## எம். ஜி. ஆர் உடல்நிலை திருப்தி

[சென்னை]

அமெரிக்காவில் வாஷிங்டனில் அமைந்துள்ள, இந்திய தூதராலயத்தில் நடைபெற்ற இந்தியாவின் 38 வது சுதந்திர தின விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். ஜி. இராமச் சந்திரன் கலந்து கொண்டார்

திரு. எம். ஜி இராமச்சந்திரனின் உடல் நிலை தற்பொழுது நல்ல திருப்தியான நிலையில் இருப்பதாக அவரை பரிசோதித்த நிபுணர் குழு தெரிவித்துள்ளது.

திரு. இராமச்சந்திரன் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் வால்ட்டிஸ்னி கனவுலகத்துக்கும் சென்ற பின்னர் நாடு திரும்புவார் என்று கூறப்பட்டது. (பி)

### தான்ஸானியா அதிபர் நியரேரே

## மூன்று ஆசிய நாடுகளுக்கு நன்றி தெரிவிக்கும் பயணம்

புதுடில்லி ஆக 16

தன்ஸானியா அதிபர் திரு. யூலியஸ் நியரேரே வட கொரியா, இந்தியா, சீனா. ஆகிய நாடுகளுக்கு நன்றி தெரிவிக்கும் பயணமொன்றை மேற்கொண்டுள்ளார்.

திரு. நியரேரே (வயது-57) தமது தன்ஸானிய அதிபர் பதவியிலிருந்து 21 வருட சேவையின் பின்னர் ஓய்வு பெறவுள்ளார்.

தமது பதவிக்காலத்தில் மேற்குறிப்பிட்ட 3 நாடுகளும் தன்ஸானியாவுக்கு வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகவே அவர் அவற்றுக்குப் பயணமாகிறார். பத்துத்தினங்கள் அவர் இந்தப் பயணத்தை மேற்கொள்வார். (இ)

### சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள்—

## தமது தாயகத்திலேயே அகதிகளாக உள்ளனர்

### இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தமது தாயகத்திலேயே சிங்கள தமிழ் முஸ்லிம் மக்கள் அகதிகளாக்கப் பட்டுள்ளனர் அரை நூற்றாண்டு காலத்திற்கு மேலாக சகோதரர்களாக வாழ்ந்த மக்கள் தமது வீடு வாசல்களை கைவிட்டு ஓடியுள்ளனர்.

இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி வெளியிட்ட அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

நாட்டின் பொருளாதாரம் உள்ளாகவே அரித்துக்கொண்டு போகிறது வெளிநாட்டுக்கடன் 8000 கோடி ரூபாவாகஉயர்ந்து விட்டது வெளிநாட்டு செலாவணியைத் தேடிதரும்உற்பத்திகள் வீழ்ச்சி கண்டுள்ளன வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புகள் அருகி வருகின்றது

உல்லாச ஹோட்டல்கள் மூடப்படுகின்றன. தேசிய கைத்தொழில்களை குழிதோண்டிப் புதைத்தாகிவிட்டது

இ போ ச. சேவை நாசமாக்கப்பட்டுவிட்டது தனியார் பஸ் சேவையும் உயிர் இழுத்துக் கொண்டுள்ளது புகையிரத சேவையும் வீழ்ந்துள்ளது படுகொலைகள் தற்கொலைகள் அதிகரித்துள்ளன கொள்ளை வீடு டைப்புகளினால் உடமைகள் மாத்திரமல்ல உயிர்களுக்கும் சேதம் விளைகின்றன வீட்டில் வைத்துக் கொள்ள முடியாத பணத்தை வங்கியிலும் வைக்க முடியாதுள்ளது உடைபடாத வங்கிகள் அபூர்வமாகவுள்ளன.

அரசினர் ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் இல்லை இருக்கும் டாக்டர்களும் தனியார் வைத்திய நிலையங்களில் வைத்தியம் செய்கின்றனர் டாக்டர்களுக்கு கொடுக்க பணம் இல்லை ஆஸ்பத்திரிகளில் மருந்தில்லை கொடுக்கும் மருந்துசீட்டுகளுக்கு செலுத்த பணமில்லை

ஆஸ்பத்திரிகளில் படுக்கைகள் இல்லை படுக்கைகளுக்கு கீழ் இருக்கவும் இடமில்லை பிள்ளைகளுக்கு பாடசாலையில் இடமில்லை பாடசாலை செல்லாத பிள்ளைகளின் தொகை கூடிக்கொண்டுள்ளது பாடசாலைகளிலிருந்து பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியாகும் பிள்ளைகளுக்கு தொழில் வாய்ப்பில்லை லஞ்சம், ஊழல், விரயம், வஞ்சகம் ஆட்சி நடக்கிறது

பிரச்னைகளுக்கு தீர்வுகாண முடியாத முதலாளித்துவவர்க்கம் இராணுவ முடிவைத் தேடுகிறது இந்நிலை ஏற்படுவதைத் தடுப்பது நம்முன்னுள்ள உடனடியான தேசிய பொறுப்பாகும்

தொழிலாளி வர்க்கத்தினதும், இடதுசாரி இயக்கங்களினதும் வலிமையிலும், ஒற்றுமையிலும்தான் இதன்வெற்றிதங்கி

(6ம் பக்கம் பார்க்க)

## உலகச் செய்திகள்

### ஈரான் எண்ணெய் ஏற்றுமதி நாசம்?

# கார்க்தீவைதாக்கிஅழித்ததாக ஈராக் அறிவிப்பு!

பக்தாத், ஆக 16

ஈரானின் பிரதான எண்ணெய் ஏற்றுமதிப் பிரதேசமான 'கார்க்தீவு'ப் பகுதிஈராக்கின் பலத்த விமானத்தாக்குதலுக்குள்ளாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது இதனால் ஈரானின் எண்ணெய் ஏற்றுமதி ஸ்தம்பிதமடையும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது.

இந்த கார்க்தீவுத் தாக்குதல் பற்றி ஈராக் நேற்று அறிவித்தது தனது விமானப்படை இத்தாக்குதலை வெற்றிகரமாக மேற்கொண்டது எனவும் கார்க்தீவப் பிரதேசம் இதனால் முற்றிலும் ஸ்தம்பிதமடைந்ததாகவும் அது மேலும் கூறியது. ஆயினும் இதுகுறித்து ஈரான் எதுவும் அறிவிக்கவில்லை

இத்தாக்குதலை ஊர்ஜிதம் செய்யும்வகையில் கார்க்தீவில் நின்ற சில வெளிநாட்டு எண்ணெய்க் கப்பல்களும் தாக்குதலுக்குள்ளாகியுள்ளதை அவற்றின் நாடுகள் அறிவித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

கார்க்தீவுப் பகுதியில் ஈராக் பல தடவை தாக்குதல் முயற்சிகளை மேற்கொண்டது. ஆயினும் இத்தடவை அதன் முயற்சி பலித்திருப்பதாகக் கூறப்பட்டது.

இந் தாக்குதல் பற்றி ஈராக் அறிவித்ததும், இந்நாட்டு மக்கள் வீதிகளில் கூடிநின்று மகிழ்ச்சி ஆரவாரஞ் செய்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

'கார்க்' தீவு ஈரானின் பிரதான எண்ணெய் ஏற்றுமதி வலயமாகும். இங்கு தாக்குதல் நடைபெற்றுள்ளதால் ஈரானின் எண்ணெய் ஏற்றுமதி மோசமாக சீர்குலையும். அத்துடன் சர்வதேச எண்ணெய் விநியோகத்திலும் தாக்கல் ஏற்படலாம். (கி)

### அஸாம் தீர்வு:

## கருணாநிதி, லோங்கோவால் உட்பட பலர் வரவேற்பு!

சென்னை. ஆக 16

அஸாம் நெருக்கடியை தீர்த்துவைத்தமை குறித்து தி மு க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி பிரதமர் திரு. ராஜீவ் காந்தியைப் பாராட்டியுள்ளார் இதுசம்பந்தமாக அவர் செய்தியொன்றை பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

திரு கருணாநிதி. இத்தீர்வுடன் பஞ்சாப, அஸாம் மாநிலங்களில சட்டசபைத் தேர்தல்களை உடனடியாகநடத்தும்படி பிரதமரிடம் கேட்டுள்ளார்

இதேவேளை அஸாம் தீர்வை இந்தியாவின் பல மாநில முதலமைச்சர்களும், எதிர்க்கட்சித் தலைவர்கள் ஆகியோரும் வரவேற்றுள்ளனர்.

ஜனதா, பாரதீய ஜனதா, தமிழ் கம்யூனிஸ்ட் கட்சி, லோக்தள் ஆகிய எதிர்க்கட்சிகள் இத் தீர்வை வரவேற்றவற்றில் அடங்குகின்றன.

அண்மையில் பஞ்சாப் நெருக்கடிக்குத் தீர்வுகண்ட அகாலிதள் தலைவர் சன்ற்ஹர்ச்சன்சிங் லோங்கோவலும் அஸாம் தீர்வைப் பாராட்டியுள்ளார்.

நேற்று இந்திய ஜனாதிபதி ஜியானி ஸெயில்சிங் இந்தியாவின் 38-வது சுதந்திரதினம் தொடர்பாக விருந்துபசாரமொன்றை வழங்கினர். அதில் கலந்துகொண்ட அனைவரும் அஸாம் தீர்வு தொடர்பாக ராஜீவைச் சூழ்ந்துநின்று பாராட்டியதைக் காணமுடிந்தது. (இ)

## முறியடிப்பு

(லண்டன்)

ஆஸ்திரேலியாவில் மாபெரும் போதைவஸ்துக்கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது இது தொடர்பாக 35 பேர் கைது செய்ய பட்டுள்ளனர்

களபிஸ் என்ற 10 தொன்கள் எடையுள்ள போதைவஸ்தை கடத்தப்படவிருந்தது துவே இதன் பெறுமதி28 கோடி அமெரிக்க டாலர்கள் எனப்பட்டது.

## ஈரான் ஜனாதிபதி தேர்தல்

லண்டன், ஆக16,

ஈரானின் 4-வது ஜனாதிபதித் தேர்தல் ஆரம்பமாகியுள்ளது 3 பேர் இத்தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

தற்போதய ஜனாதிபதி அலி கொமெய்னியும் இவர்களில் ஒருவராவார். இவர் இரண்டாவது தடவையாக இத் தேர்தலில் போட்டியிடுகிறார்.

2 கோடியே பதது லட்சம் பேர் இத் தேர்தலில் வாக்களிப்பார்கள். (கி)

### மணிவாக்கு

பக்தனின் வலிமை எதில் தங்கியுள்ளது? அவன் கடவுளின் குழந்தையாகின்றான். அவன் சிந்தும் பக்திக் கண்ணீர்களே அவனுடைய வலிவுமிக்க ஆயுதமாகும்.

—ஸ்ரீராமகிருஷ்ணர்

# நமது நோக்கு

## இன்னொரு பெரு விமான விபத்து

21ம் நூற்றாண்டு உதயமாக விண்வெளியில் திருமணம் நடப்பது சாத்தியமென்று விண்வெளி ஆராய்ச்சியாளர் ஆர்தர் சி. கிளார்க் கூறிவருகிறார்.

இந்த அதிசய செய்தி இன்று நிறைவேறிவரும் விண்வெளி சாதனைகளை நோக்குங்கால் நம்பமுடியாததல்ல.

தரையில் நடைபெறும் வீதிவிபத்துக்கள், இந்த முன்னேற்ற காலத்திலேயே குறைந்தபாடில்லை.

பறக்கும் மனிதனின் ஆற்றலை மட்டுப்படுத்தவோ என்னவோ, நிலத்தில் மனிதன் தலையால் நடப்பது இன்று கவலைக்குரியதாகின்றது.

விமான விபத்துக்கள், வீதிவிபத்துக்களுக்கு குறைவாகவே காணப்படுகின்றன. எனவே விமான சேவையில் மக்கள் அதிக நம்பிக்கைகொள்ள நியாயமிருந்தது.

இன்று விமானசேவை பரந்துபட்டு வளர்ச்சியடையும் வேளையில் விமான விபத்துக்கள் அடுத்தடுத்து நிகழ்வது இந்த அவசிய சேவைக்கு கண்ணூறு பட்டதுபோல் தோன்றுகிறது.

இந்திய ஜம்போ ஜெட் விமான விபத்து, நாசவேலையாக இருந்தாலும் இத்தனை உயிர்களை மாயமான முறையில் கொன்றுவிட்டதே என்று உலகே கவலைகொண்டது.

அதனை வெல்லவல்ல விபத்து இன்று ஜப்பானில் நடைபெற்றிருப்பது அதிர்ச்சிக்குமேலே அதிர்ச்சியென்றே சொல்ல வேண்டும்.

ஜப்பானிய விமான சேவை; ஜப்பானின்சொந்த விமானம், உள்நாட்டு சேவையில் 524 பயணிகள் கொல்லப்பட்டனரென்றால், தினசரி விமானப் பயணத்தில் ஈடுபடும் அனுபவசாலிகளே அதிகம் யோசிக்க வேண்டியிருக்கிறது.

நாம் முன்னரும் குறிப்பிட்டதுபோல் ஆகாயத்தில் விபத்தென்றால் ஆண்டவனே உதவமுடியாத நிலை.

இன்றைய விபத்துக்கள் எல்லாமே யந்திரக் கோளாறால் ஏற்படுவதில்லை. பயங்கரவாதசக்திகள், கடத்தல்காரரின் கொடுமைகள், அண்மையில் பல விபத்துக்களுக்கும் காரணமாக இருந்தன.

ஜப்பானில் நடைபெற்ற இப்பெரும் விபத்து இதற்கு புறம்பானதென்று சொல்லப்படுகிறது.

தொழில் நுட்பத்தில் உலகிலேயே முதலிடம் வகிக்கும் ஜப்பான், தனக்குச் சொந்தமான விமானத்தின் யந்திரக்குறைபாட்டினால் நொறுங்கியமை ஒரு நம்பமுடியாத துன்பச் செய்தி.

ஆனையும் அறுகம்புல்லில் சறுக்குமென்பதுபோல் எந்தஅசாதாரணமுன்னேற்றத்திலும் ஒருசிறு குறைவு உண்டானால், அது பேராபத்துக்கு இடமளிக்குமென்பதே இப் பெரும் விபத்தின் படிப்பினை.

சர்வதேச அரங்கில் விமானசேவை எவ்வளவு இன்றியமையாதது என்பதை இன்றைய உலக நிகழ்ச்சிகள் நிரூபிக்கின்றன. அத்தகைய சேவையில் ஆபத்து அதிகரிக்குமானால் அதற்கு பதிலாக வேறென்ன உண்டு?

விமான சேவையின் வேகமும் பாதுகாப்பும் அதிகரிக்கப்படும் இக்காலத்தில், விண்ணில் பஸ்சேவை சாத்தியமாகும் இவ் வேளையில், மீண்டும் விமானப் பயணம் ஏக்கமளிப்பதானால், சாண்ஏற முழம் சறுக்குவது என்று சொல்வது சரியாகாது முழம் ஏறச் சாண் சறுக்குவதென்பது உண்மையே.

பெரும் றயில்வே விபத்துக்கள், அதிகரிக்கும் வீதி விபத்துக்கள், றயில் ஓடுதலையும், கார்களின் தொகை குறைவதற்கும் காரணமாகின்றதா?

இன்று எமது வீதிகளில் ஓடும் தனியார் வானைப் பார்த்து பயப்படாத மனிதன், விமானப்பயணம் கிட்டுமாயின் இத்தகைய விபத்து தடையாகவிருக்கப் போவதில்லை. என்றாலும் இப்பாரிய சேவையில் ஈடுபடும் பெரும் நாடுகள் மிகப் பாதுகாப்பான முறையில் விமானம் தயாரிப்பதோடு பயணத்தில் ஏற்படக்கூடிய அசம்பாவிதங்களுக்குப் போதிய மாற்று நடவடிக்கைகள் எடுக்கும் யந்திர நுட்பத்தில் முன்னேற வேண்டும்.

எங்கள் நாட்டிலேயே பெரும் விமான விபத்துக்கள் நடந்திருக்கின்றன. அவை எங்கள் நாட்டின் விமான சேவையுடன் தொடர்பற்றவையாக இருந்தபோதும், மக்களுக்கு உண்டான அதிர்ச்சியும், ஏக்கமும் இன்னும் பசுமையாக இருக்கின்றன.

இன்று ஆகாயத்தில் அதிகரிக்கும் அசம்பாவிதங்கள் எவ்வகையிலும் தடுக்கப்பட வேண்டுமென்பதே எமது உறுதியான கருத்து.

## இணைப்புச்செய்தி ஒரு விளக்கம்

தங்கள் 2. 8. 85 வெள்ளிக்கிழமைநாளேட்டில்எமது யாழ் மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்சங்கம் இன்னுமொரு சங்கத்துடன் இணைந்து விட்டதாக வந்த செய்தி எம்மை திடுக்கிடவைத்தது. 1934ம் ஆண்டு முதல் 50 வருடகாலமாகத் தனித்தியங்கிவருகின்றதுஎமதுசங்கம்இத்தகைய இணைப்புபற்றி எத்தவித அறிவித்தலோ அறிவுறுத்தலோ எமக்கு தாய்ச்சங்கத்தினால் அனுப்பப்படவில்லை. எமது சங்கமும் இணைவதாக முடிவு செய்யவும் இல்லை. இதைப் பற்றி ஆராயவும் இல்லை நிலைமை இவ்வாறிருக்க நாமறியாமல் நமது சங்கம்இன்னொரு சங்கத்துடன் இணைந்து விட்டதாகக் கூறப்பட்டது தவறானதாகும்.

நா. சோமசுந்தரம்,
கௌரவ செயலாளர்

# துர்க்கையைத் துதிப்போம் துன்பத்தைத் தொலைப்போம்

இன்று ஆரம்பமாகவிருக்கும் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி மகோற்சவத்தை முன்னிட்டு இக் கட்டுரை வெளிவருகிறது.

மகாதேவி பத்மநாதன்

அதிகாலை 4-30 மணி; கோழிகள் கூவுகின்றன; குருவிகள் கீச்சிடுகின்றன; காகங்கள் கரைகின்றன; தெல்லிப்பழை துர்க்காதேவிஆலய மணியோசை "டாங்டாங்" என்று அடித்துஓங்கார ஒலியை எழுப்புகிறது. திருப்பள்ளி எழுச்சிப் பாடல் நான்கு திசையும் இரண்டு மைல் சுற்றளவுக்குக் கேட்கிறது அம்மாளே! தேவி: தாயே! தயாபரி! துர்க்கை ஆச்சி என்று சொல்லிக் கொண்டு பிள்ளைகள் முதல் பெரியவர்கள் வரை படுக்கையை விட்டு எழுந்து விடுகின்றனர்.

"வானுறு மீனினம் மறைந்தன புவியின்
மையிருட் போர்வையும் அகன்றது வண்டு
தேனுறு மலரினைத் தேடி வெங் கெங்கும்
செவ்வழியிசைத்தன திரிவதும் கண்டேன்
பானுவின் செங்கதிர் குண திசைப் பரப்பின்
படர்வ தொர மையமும் அணுகிய தனையே
தூநறு மலர்ப் பொழில் சூழ்தரு தெலித்
துர்க்கையம்மா பள்ளி யெழுந்தருளாயே"

என்று இவ்வாறு பூபாள ராகத்தில் தொடர்ந்து பத்துப்பாடல்களையும் காலை 5-00 மணிப் பூசை வரை படிக்கப் படுவதும், தினமும் பக்தர்கள் இதனைக்கேட்டுக்கேட்டு ஆனந்தமடைவதும் அன்றாட நிகழ்ச்சியாகும். ஏழாவது நூற்றாண்டிலே திலகவதியார் ஆற்றிய சரியைத் தொண்டுகளை துர்க்காபுரம் மகளிர் இல்லத்திணர் வைகறை நேரத்தில் அலகிட்டு, மெழுக்குமிட்டு, கோலம்போட்டு மலரெடுத்து, மாலை தொடுத்து, பணி செய்வது கண்கொள்ளாக்காட்சியாகும். இவை அனைத்தையும் ஏற்றுக் கொண்டேன் என்பதைப்போல் அன்னை



தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி

துர்க்காதேவி குமிழ்சிரிப்புடனும், கருணைததும்பும் கடைக்கண்பார்வையுடனும், வீறு கொண்ட தோற்றத்துடனும் அன்பர்களுக்குக் காட்சிகொடுக்கு அற்புதம் சொல்லில் அடக்காது. இதனை, நயந்தும் போற்றிப் பாடியுள்ளனர் பாவலர்கள்.

திருக்கோயில்களால் சிறப்புப் பெற்றது நமது ஈழவள நாடு. சிவத்தலங்களும் விஷ்ணு தலங்களும் சக்தி தலங்களும் இந்நாட்டை அழகு படுத்துகின்றன. இவற்றுள் இந்நாட்டின் வடபால் அமைந்த மிகப் புராதனமான தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம் சைவப் பெருமக்களால் நன்கு அறியப்பட்ட தொன்று.

பண்டைக்காலந் தொட்டு ஈழநாட்டுக்கும் பாரதநாட்டுக்குமிடையே ஏற்பட்டிருந்த ஆன்மீகத் தொடர்பு யாத்திரைகளினால் காலகதியில் விருத்தியடைந்துள்ளது அங்கிருந்து அந்தணர்கள், சிற்பக் கலைஞர்கள், தெய்வத்திருவுருவங்கள் இந்நாட்டுக்கு வரவழைக்கப்பட்ட சிறப்பை வரலாறு காட்டும். துர்க்கையம்பாள் ஆலயத்தோற்றமும் இவ்வரலாற்றோடு தொடர்புடையதே மாவிட்டபுரம் கந்தசுவாமிகோயிலோடு இவ்வாலயத்துக்குள்ள தொடர்பை ஆண்டுதோறும் நடைபெறும். விஜயதசமி விழா எடுத்துக்காட்டுகிவது. அத்தினத்தில் மாவைமுருகப் பெருமான் இவ்வாலயத்துக்கு எழுந்தருளி வந்து "வன்னி வாழை" வெட்டும் வைபவம் கடந்த நூற்றைம்பது ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது.

அழல்போல் மேனியளும், தன்மாண்பினாலேயே ஒளிர்பளும் செயலுருவாவதற்குத் தொழப்படுவளுமான துர்க்காதேவியை நான் சரண்புகுகின்றேன். பிறவிக்கடலைக் கடக்க அவள் எனக்கு உறுதுணையாஇவள். "என்று புகழ்கிறது நாராயண உபநிஷதம். "சர்வமங்களா" என்று துர்க்கையைப் போற்றுகிறார்கள் எல்லோருக்கும் சர்வமங்கள ரூபிணியாகக் காட்சி தருகிறாள். கருணை மிகுந்த தேவி எமது பக்குவம் நோக்கி எம்மை வலிய வந்து ஆட்கொள்வாள். கதி முனையில் நடப்பது போன்று உண்மையாகவும், கவனமாகவும், கட்டுப்பாடாகவும் வழிபடாவிட்டால் அவளை நெருங்குவது எளிதானதன்று. நெருங்கமுடியாத பெருமையுடன் விளங்குவதால் துர்க்கை என்ற நாமம் ஏற்பட்டது. ராகுநேரப் பூசையைத் துர்க்காதேவி விரும்பி ஏற்றுக்கொண்டு அதற்குரிய பயன்களை அடியார்களுக்கு வழங்குவதால் பக்தர்கள் பலர் இங்கு கூட்டம் கூட்டமாக வந்து நேர்த்திகள் செலுத்துகிறார்கள்.

(5ம் பக்கம் பார்க்க)

## கல்விப் பணிமனை முல்லைத்தீவு

# மக்கள் கருத்து

மேற்படி தலைப்பில் கடந்த 05-08-85-ல் இலங்கைஆசிரியர் காங்கிரஸ் செயலாளர் மக்கள் கருத்து என்ற பகுதியில் வெளியிட்ட கடிதத்திற்கு பதில் கடிதமாக உண்மை நிலையைமீண்டும் தெளிவுபடுத்துவதற்காக இதனை எழுதுகிறேன்.

எமது மாவட்டத்திற்கு முழு நாட்களும் கடமையாற்றும் ஒரு கல்விப் பணிப்பாளரைக் கேட்டோமேதவிர தற்போது உள்ள கல்விப்பணிப்பாளரை தகைமைஅற்றவர்என்று குறிப்பிடவில்லை. முல்லைத்தீவு கல்விப்பணிப்பாளர் கிளிநொச்சிக்கும் கல்விப் பணிப்பாளராக இருப்பதால் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய மூன்று நாட்கள் அவரது கடமைநாளகும். இத்தினங்களிலும் அவர் பல காரணங்களினால் கடமைக்கு வராது விடுவதினால் ஆசிரியர்கள், பெற்றோர், பொது மக்கள் போன்றோருக்கு கல்வி தொடர்பாக சந்திப்பதற்கு கஷ்டமாகஉள்ளது. அத்தோடு எம்மிடம் எமது சங்கஉறுப்பினர்கள் பலர் கல்விப்பணியாளரைச் சந்திக்கவந்து சந்திக்க முடியாது பலநாட்களாக அலைந்து திரிந்த அனுபவங்களை நேரிலும் எழுத்திலும் தந்துள்ளார்கள். இதுபோன்றுபொது அமைப்புகள் கூடபணிப்பாளரைச் சந்திக்கமுடியாது காரியாலய வாசலில் காத்துநின்ற சம்பவங்களும் எமக்குத் தெரியும்.

மேற் கூறப்பட்ட விடயங்களைக் குறிப்பிட்டு இதனால் ஆசிரியர்களும், பெற்றோர்களும் படும் கஷ்டங்களை உணர்ந்து முல்லைமாவட்டக் கல்வியின் நன்மைகருதி ஒரு நிரந்தரக் கல்விப்பணிப்பாளர் எமது மாவட்டத்திற்கு வேண்டும் என்று கோரியதைப் பார்த்து சந்தோசப்பட்டு அதற்கு ஆதரவளிக்க வேண்டிய ஆசிரியகாங்கிரஸின் முல்லை மாவட்டக்கிளை அதிர்ச்சியும் வேதனையும் அடைவது எமக்குஅதிர்ச்சியை அளிக்கின்றது.

கல்விப்பணிப்பாளர் கல்விப் பணிமனையில் இல்லாத நாட்களில் கல்வி அதிகாரிமூலம் காரியங்களை நிறைவேற்றமுடியாத சூழ்நிலை உள்ளது என்றுகுறிப்பிட்டோமேதவிர கல்விப்பணிப்பாளர் அதிகாரங்களை தன்னிடம் குவித்துவைத்துள்ளார் என்று எவ்விடத்திலும் நாம் குறிப்பிடவில்லை. இப்படி இருக்க ஆசிரிய காங்கிரஸ் செயலாளர் நாம் குறிப்பிடாததொன்றைக் குறிப்பிட்டு இது விஷமத்தனமானதும் அவரதுநிர்வாகத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்த எடுக்கப்பட்ட சதிமுயற்சி என்று கூறுவது மிகவும் விசமத்தனமானதும் எமது கழகத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் ஒருசெயலாகும். ஒரு சகோதர ஆசிரிய சங்கம் இவ்வாறு நடந்து கொள்வது முறையற்ற செயலாகும்.

எமது மாவட்ட கல்விநிலை பற்றியும் ஆசிரியர்கள், மாணவர்கள் பிரச்சனைபற்றியும்நாம் எவருடனும் விவாதித்து ஆதாரங்களுடன் உண்மைப்படுத்த முடியும். அத்துடன் நாம் எவரையும் குறை கூறும் நோக்குடன் செயற்படவில்லை. மாவட்டத்தின் கல்வி நிலைபற்றியும் ஆசிரியதேவைகள் உரிமைகள் பாதிக்கப்படுவதை வெளிப்படுத்துவதற்குமே பத்திரிகை மூலம் அறிக்கைகளையும இவ்வறிக்கைகளையும் விடுகின்றோம்.

ம. அன்ரனி ஜெயநாதன்
செயலாளர்
இ. த. ஆசிரிய சங்கம்
முல்லைத்தீவு

கச்சேரி — யாழ்ப்பாணம்

# அரச வைத்தியசாலைக் கட்டிடங்கள் திருத்த வேலைகள்

1985-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி காலை 10-00 மணிவரை யாழ். செயலக சிரேஷ்ட நிர்வாக உத்தியோகத்தர் அவர்களால் கீழே குறிப்பிடப்பட்ட வேலைகளை ரூபா 25,000/-க்கு மேற்பட்ட தொகைக்கு, பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும். அன்றைய தினம் காலை 10-00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் ஒப்பந்தகாரரோ அவர்களின் பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.

இவ் வேலைகளைச் செய்யவிரும்புவோர் எவரும் அரச கருமவேலை ஒப்பந்தகாரராகவோ அல்லது உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால் அல்லது கூட்டுறவு உதவி ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

இவ் வேலைகளை செய்வதற்கு விரும்புவோர் செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை யாழ். செயலக சிரேஷ்ட நிர்வாக உத்தியோகத்தரிடம் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

| இல: | நிலையத்தின் பெயர் | வேலையின்விபரம் |
|---|---|---|
| 1. | மாவட்ட வைத்தியசாலை, ஊர்காவற்றுறை | வெளிநோயாளர் பிரிவு குளியலறைகளுக்கு சுவரோடு நிலவோடு குழாய் பொருத்துதல். வைத்தியரின் விடுதிக்கு "பிளஸ்சிங் சிஸ்ரேண்" பொருத்துதல். |
| 2. | ,, ,, ,, | 2ம் இல "வாட்"க்கு சுவரோடு நிலவோடு குழாய்கள் பொருத்துதல். |
| 3. | ,, ,, ,, | 3ம் ,, ,, ,, |
| 4. | ,, ,, ,, | 4ம் ,, ,, ,, |
| 5. | ,, ,, ,, | 1ம் ,, ,, ,, |
| 6. | மாவட்ட வைத்தியசாலை, புங்குடுதீவு | படலைக்கான திருத்த வேலை, வைத்திய அதிகாரி விடுதிக்கான மதில் சுவர் கட்டுதல். |
| 7. | ,, ,, ,, | சவச்சாலைக்கு மரத்தாலான படலை அமைத்தல். |
| 8. | ,, ,, ,, | வைத்தியர் விடுதிக்கு மதில் சுவர் கட்டுதல் குளியல் அறை "கராச்" திருத்த வேலைகள். |
| 9. | சிற்றயல் கூறு, காரைநகர் | சமையலறைத் திருத்தவேலை. |
| 10. | சிற்றயல் கூறு காரைநகர் | எல்லா "வாட்"க்கும் சமையல்அறை தாதிகள் விடுதி கதவுகளுக்கு பூட்டுப் பிணைச்சல் பூட்டுதல், யன்னல் மாற்றம் செய்தல். |
| 11. | ,, ,, ,, | வெளிநோயாளர் பிரிவுக்கும் "வாட்"க்குமான மூடிய பாதை அமைப்பு. |
| 12. | ,, ,, ,, | வைத்தியசாலைக் கட்டிடம் தாதிமார் விடுதிக் கட்டிட சுவர்ப் பூச்சுவேலை வெள்ளையடித்தல் போன்றவை. |
| 13. | ,, ,, ,, | வைத்தியசாலைக்கான வன் மண்ணாலான பாதை. |
| 14. | ,, ,, ,, | சவச்சாலை திருத்தம். |
| 15. | ,, ,, ,, | இணைப்பு மலகூட குளியல் அறை குழாய் பொருத்து வேலை. |
| 16. | சிற்றயல் கூறு, அச்சுவேலி | குழந்தைப்பேறு பிரிவுக்கு கதவு அமைத்தல். |
| 17. | ,, ,, ,, | சதுர கம்பிவலை அமைத்தல். |
| 18. | ,, ,, ,, | கிணறு ஆழமாக்குதல். |
| 19. | கிராமிய வைத்தியசாலை, பண்டத்தரிப்பு | மேலதிக களஞ்சிய அறை. |
| 20. | ,, ,, | சிற்றூழியருக்கான கடமையாற்றும் அறை. |
| 21. | கிராமிய வைத்தியசாலை, வட்டுக்கோட்டை | முன்புற படலை அமைத்தல். |
| 22. | ,, ,, | மதிற் சுவர் அமைத்தல். |
| 23. | சிற்றயல் கூறு, வல்வெட்டித்துறை | சவச்சாலை கதவு யன்னல்களுக்கு நாகவலை பூட்டுதல். |
| 24. | சிற்றயல் கூறு, வல்வெட்டித்துறை | 1ம் 2ம் "வாட்"கான திருத்த வேலை. |
| 25. | ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை | வாளி மலகூடத்தை நீரடைப்பு மலகூடமாக மாற்றுதல். |
| 26. | மாவட்ட வைத்தியசாலை கிளிநொச்சி | பழுதடைந்த "சிஸ்ரேண்" மாற்றி புதியது போடுதல். |
| 27. | ,, ,, | வெளிநோயாளர் பிரிவுக்கு வெள்ளை அடித்தல், கூரை ஒழுக்குகளை பரிசோதித்தல், திருத்துதல். |
| 28. | ,, ,, | உடைந்த யன்னல் கதவு கண்ணாடிகள் அகற்றி புதியது போடுதல், கதவுக்கு பூட்டு போடுதல். |
| 29. | கிராமிய வைத்தியசாலை, மருதங்கேணி | சவச்சாலை வேலைகள் பிரேத பரிசோதனை மேசையுடன். |
| 30. | ,, ,, | வாளி மலகூடத்தை நீரடைப்பு மலகூடமாக மாற்றுதல். |
| 31. | சிற்றயல் பிரிவு பூனகரி | கூரை திருத்த வேலை. |
| 32. | ,, | வாளி மலகூடத்தை நீரடைப்பு மலகூடமாக மாற்றுதல். |
| 33. | சிற்றயல் பிரிவு பளை | வாளி மலகூடத்தை நீரடைப்பு மலகூடமாக மற்றுதல். |

கேள்விப் பத்திரங்கள் அனுப்பும் என்வலப்பின் இடதுபக்க மூலையில் "சுகாதாரப் பகுதியின் கட்டிட திருத்த வேலைக்கான கேள்விப்பத்திரம்" என குறிப்பிடப்படல் வேண்டும்

வை. மு. பஞ்சலிங்கம்,
மாவட்ட செயலாளரும், அரசாங்க அதிபரும்,
யாழ்ப்பாணம்.

14-8-85. 89

# "மீண்டும் ஒரு சிறைப் படுகொலை!"

(யாழ்ப்பாணம்)

படுகொலை செய்யப்பட்ட அரசியல் கைதிகளின் விபரங்களை வெளியிட அரசை நிர்ப்பந்திக்குமாறு அனைத்து ஜனநாயக முற்போக்கு சக்திகளுக்கும் 'ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி' (ஈ. பி. ஆர். எல். எவ்) இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

'மீண்டும ஒரு வெலிக்கடை' -'தங்காலைச் சிறைச்சாலையில் அரசியற்கைதிகள் அறுவர்படுகொலை' என்ற தலைப்பில் மேற்படி இயக்கம் அறிக்கைஒன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

"ஸ்ரீலங்கா அரசு தனது பாதுகாப்பில்தங்காலைச்சிறைச்சாலையில் வைத்திருந்த ஆறு அரசியல் கைதிகளை படுகொலை செய்துள்ளது" 1983ம் ஆண்டு ஜூலை மாதம் நடத்தியதைப் போல் மீண்டும் ஒரு சிறைப் படுகொலையை நடத்திமுடித்திருக்கிறது. 'பூசா' இராணுவ முகாமிலிருந்து அரசியற்கைதி ஒருவரை துப்பாக்கி முனையில் வற்புறுத்தி, காவல் வேலியை தாண்டி வரவழைத்து. துப்பாக்கிப்பிரயோகம் செய்துவிட்டு "தப்பியோட முயன்ற பயங்கரவாதி சுடப்பட்டார்" என பத்திரிகையில்உத்தியோகபூர்வ அறிக்கையை வெளியிட்டது. கொக்கிளாய், நாயாறு சம்பவங்களுக்குப் பின்னால் வவுனியா இராணுவ முகாமிலும், ஈறற்பெரியகுளம் இராணுவ முகாமிலும் இருந்த பல அரசியல் கைதிகளை வெட்கக்கேடான முறையில் சிறைக்கூண்டுக்குள்ளேயே வைத்து சுட்டுத்தள்ளியது. அதுபோலவே தங்காலை அரசியற் கைதிகளையும்படுகொலைசெய்துவிட்டு பாசாங்கு செய்கிறது.

பெண் அரசியல் கைதிகள் பாலியல் வதைகளுக்கு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல், தமக்கு நீதிவிசாரணை நடத்துமாறு கோரி 'உண்ணாவிரதம்' இருக்கமுற்பட்ட அரசியற் கைதிகள் அறுவரை படுகொலை செய்திருக்கிறது. ஒருவரா? இருவரா? இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட அரசியற் கைதிகளை கொலை வெறியர்கள் தமது பிடியில் வைத்துக் கொண்டுள்ளனர். இப்படி படுகொலையாவதுதானா இவர்களின் விதியா? அல்லது புதுவிதி செய்ய புறப்படுகிறீர்களா?

அரசியல் கைதிகளின் படுகொலையைக் கண்டித்து; அரசியல் கைதிகளின் அந்தஸ்தை வற்புறுத்தி, அரசியல் கைதிகளின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் கோரி; போராட்ட நடவடிக்கைகளில் இறங்குமாறு அனைத்துப் பிரிவினருக்கும் அறைகூவல் விடுகின்றோம். அரசியல் கட்சிகள், ஜனநாயக முற்போக்கு சக்திகள், தொழிற்சங்கங்கள், வெகுஜன ஸ்தாபனங்கள், மதநிறுவனங்கள் மற்றும் இதர மக்கள் அமைப்புக்கள் ஒருமித்த குரலில் தமது ஆளுமைக்குட்பட்ட வகையில் வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுக்குமாறு அழைப்பு விடுக்கின்றோம். சகல விடுதலை அமைப்புகளும், அனுகும் பிரச்னையின் பொதுஇலக்கை கவனத்திற்கொண்டு கோஷ்டிவாதப் போக்குகளுக்கோ, ஒழுங்கீனங்களுக்கோ இடமளியாது, மக்கள் நலன்களுக்கு ஊறு நேராதவகையில் இப்போராட்ட நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்குமாறு வேண்டுகின்றோம். [மா)

## துர்க்கை

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

துர்க்காதேவி ஆலயத்தில் நடைபெறவிருக்கும் மகோற்சவத்தை முன்னிட்டு அனைவரும் பின்வரும் சுலோகத்தை ஜெபித்து உய்தியடைவோமாக:

"அம்மா, தாயே, துர்க்கா தயாபரி, ஜெகன்மாதா! உன் திருவடிகளே எனக்குச் சரணம்: மந்திர ஜெபமோ ஆசன முறையோ கிரியாசாதிகளோ எனக்குத் தெரியாது. இது சத்தியம் அம்மா. ஆனால் நான் உன்னைச் சேர்ந்தவன் எனக்கு வேறு துணையில்லை. எவ்வளவுதான் பிழைகள் செய்திருந்தாலும் உனக்கே யுள்ள கருணையினால் என்னைக் காப்பாற்றுவாயாக! எந்தப் பரவாசரியங்களிலும் ஈடுபடாமல் என்னைத் தடுத்து நிறுத்து. எனக்கு எஞ்சியுள்ள வாழ்நாளை உன் பணியிலே செலவிடக்கூடிய சித்தசக்தியைத் தரவேண்டும். என் தாயே! இந்தக் கலியுகத்தில் ஏற்படும் துன்பச்சுமையைத் தாங்க முடியாமல் தவிக்கிறேன். இந்நிலையில் நாட்டுக்கும் வீட்டுக்கும் நலம்பல விளையவும், அமைதி ஏற்படவும் உனது திருவருளை நான்குபுறமும் வீசி நிற்பாயாக! என்னைப்போல் தவித்துக் கொண்டிருக்கும் ஆயிரமாயிரம் மக்களைக் கரையேற்றி இரட்சிப்பாயாக! பணம் வேண்டும் அல்லது மனம்வேண்டும்என்று மாத்திரம் உன்னைக் கேட்க இங்குவரவில்லை. அத்துடன் இந்த நாட்டை வாழ்விக்கும் நல்லமனம் வேண்டும் ஒன்று தான் உன்தி [illegible] வேண்டுகிறேன். அம்மா! தாயே! துர்க்கா! உன் திருவடிகளே சரணம்! சரணம்: சரணம்:"

## ரூபவாஹினி

மாலை

| | |
|---|---|
| 5-00 | செய்திகள் |
| 5-05 | கார்டூன் |
| 5-30 | Road to Wembly உதைபந்தாட்டம் (ஆங்கிலம்) |
| 6-30 | செய்திகள் (தமிழ்) |
| 7-00 | விஞ்ஞான நிகழ்ச்சி |
| 8-00 | செய்திகள் (சிங்களம்) |
| 8-25 | நாடக நிகழ்ச்சி (சிங்களம்) |
| 9-00 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 9-25 | 'Welcome to MoscowFriends' (12-வது உலக இளைஞர் விழா) |
| 9-50 | Starsky and Hutch-1 (ஆங்கிலம்) |
| 10-40 | ஒளிபரப்பு முடிவு |

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை அரசடி ஸ்ரீஒங்கார விநாயகப் பெருமான் ஆலய அலங்கார உற்சவம் எதிர்வரும் 19-ம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது. 11 நாள் அலங்கார உற்சவத்தில் 10-ம் நாள் புதன் கிழமை பகல் 12 மணிக்கு ஒங்கார விநாயகப்பெருமானுக்கு அஷ்டோத்தரசத சங்கு அபிஷேகமும் தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

## பொலிஸ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரும் சென்று கொண்டிருந்தனர். இச் சந்தர்ப்பத்திலேயே பீரங்கித்தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது.

"இராணுவத்தினர் திருப்பி துப்பாக்கிப்பிரயோகம் செய்த பொழுது தீவிரவாதிகள் தப்பி ஓடிவிட்டனர்". (ரா)

### வவனியாவிலுள்ள

## சிங்களக் கிராமங்களில் உணவு தட்டுப்பாடு !

(வவனியா)

வவனியா வடக்கு சிங்கள கிராமங்களான பாவற்குளம், இலுக்குளம் ஆகிய பகுதிகளில் அச்சத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கும் சுமார் 750 சிங்களக் குடும்பங்கள் பங்கிட்டு உணவுப் பொருட்களை பெறமுடியாத நிலையில் உள்ளனர்

தீவிரவாதிகளின், தாக்குதல் நடவடிக்கைகளுக்கு அஞ்சி தங்கள் நாளாந்த உணவுப் பொருட்களை பெறமுடியாதிருக்கும் இவர்களுக்கு உடனடியாக உணவு பொருள்களை அனுப்ப ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

ஏற்கனவே, கொக்குவெலி, பாமடுவ, அபரந்துலாவ கல்பொத கிராமங்களில் வாழும் 850 குடும்பங்களுக்கு பங்கிட்டு பொருட்கள் அனுப்பப் பட்டன. (ச

### முதலாவதாக சித்தி

(புலோலி)

இலங்கை நூலக சேவைகள் சபையினால் 1984ம் ஆண்டு நடாத்தப்பட்ட முதலாம் ஆண்டு நூலகவியல் பரீட்சையில் கரவெட்டி மேற்கைச் சேர்ந்த செல்வி. இந்திராணி கந்தப்பு அகில இலங்கையில் கூடிய புள்ளிகளைப்பெற்று முதலாவதாகச் சித்தியடைந்துள்ளார்'' இவர் அகில இலங்கையிலும் முதலாவதாகச்சித்தியடைந்துள்ளமையால் இவருக்கு ஞாபகார்த்தப்பதக்கம் வழங்கப்படவுள்ளது.

### வவனியாவில்

## நூல் நிலையம் எரிந்ததில் 23 ஆயிரம் ரூபா நஷ்டம்

(வவனியா)

வவனியா நகரசபை நூல் நிலையம் ஒரு பகுதி எரிந்ததினால் 23 ஆயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப் பட்டுள்ளது.

இத் தகவலை நகர சபைத் செயலாளர் திரு ஜே செல்வரட்ணம். தெரிவித்தார் எத்தனை புத்தகங்கள் எரிந்தன என்பது தெரியவில்லை . நூல் நிலைய முக்கிய தஸ்தாவேஜுகளும் இச் சம்பவத்தில் தீக் கிரையாக்கப்பட்டுள்ளன.

வவனியாவில் கண்ணிவெடிச் சம்பவத்தின் பின் இடம் பெற்ற அசம்பாவிதத்தின் போது இந் நூல் நிலையமும் தீமூட்டப்பட்டது தெரிந்ததே

தமது

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளது. இதற்குரிய உத்தரவாதம் தொழிலாளி வர்க்கக் கட்சியான கம்யூனிஸ்ட் கட்சியை பலப்படுத்துவதாகும். இம்மாபெரும் பணிக்கு தங்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் கேட்கின்றோம். (ச)


# விலைக் குறைப்பு

முன்பு! ரூ. ~~415.000/-~~

இப்போது!

ரூ. 395,000/-

மட்டுமே

TATA ENGINEERING

TATA 1210 SE


உங்கள் டாட்டா நிரூபித்த முதலீடு

ஏக விநியோகஸ்தர்:

டீசல் அன்ட் மோட்டார் எஞ்சினியரிங் கம்பனி லிமிட்டெட்

65, ஜெத்தவன வீதி, கொழும்பு 14.

தொலைபேசி: 23702-4



Almeida Associates

பாலகன் V.V.
(சாந்தி முன்பாக
Daily 5 Shows
WAR KILL

"லதா" மினி
(கோண்டாவில்)
10-30, 3-30, 6-45
மோகன் - சரிதா
அண்ணி

வின்ஸர் (யாழ்.)
Daily 10-30, 2-30, 6-25,
கமலஹாசன்-மாதவி
ராதா-சுலக்சனா-தேங்காய்
டிக்-டிக்-டிக்

ஸ்ரான்லி மினி
5"X5" திரைவானில்
10-30, 12-30, 2-30
4-30, 6-30
RAID ON
ENTEBBE
[அதிரடி தாக்குதல்]

மே(f)பெயர் மினி
சினிமா
(கன்னாதிட்டி காளிகோவில்
அருகில்)
10-30, 4-45, 7-00
"Basket Case"
தன் உடலில் ஒட்டிப்
பிறந்த ஒரு அரை உருவம்
கொண்ட பயங்கர ரகுலா
வின் திகில் நிறைந்த கதை

வெலிங்டன்
10-30, 2-15, 4-30,
6-45,
திகதி: 14 15
THEATRE OF DEATH
16 முதல்
DRAGON DIES HARD
(புரூஸ்லியின் படம்)
முதல் முறையாக யாழ்ப்
பாணத்தில் காட்டப்படு
கிறது.

விஜோ சினிமா
10-30, 2-30, 6-30
2-வது மாதமாக
ஓடுகிறது!
தியாகராஜன்,
சிவசந்திரன்,
பூர்ணிமா, ஜெயராம்,
இலக்சுமிதா, ஜெய்சங்கர்
நடித்த
பாலு மகேந்திராவின்
நீங்கள் கேட்டவை
ஈஸ்ட்மன் கலர்

லிபேர்ட்டி மினி
10-30, 12-30, 2-30.
TERROR
பி.ப. 4 45 7-00
Charles Bronson
10 to MIDNIGHT
(Adults Only)

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2-30 6-00
முத்துராமன் - ஜெயலலிதா
தங்கவேலு
கணவன் மனைவி

S.T.L. மினி சினிமா
திருநெல்வேலி
10-30, 2-15, 5-15
சிவாஜி—சாவித்திரி
நடித்த
வணங்காமுடி
18 முதல்
மன்னாதி மன்னன்

நியூ சினிமாலயா
10-30, 2-30, 4-30 6-30
The Wild
Geese
இராணுவ முகாம்களின்
திகிலூட்டும் திடீர் தாக்
குதல்கள் கொண்ட
சித்திரம்
Adults Only

நியூ சாந்தி மினி
10-30. 2-30, 4-30, 6-30
Pending
Grievences
[JUNGLE WOMEN]
இளம் பெண்களைக்
கொன்று தின்னும்
கொடூரம்! மற்றொரு
கொடூரம்!!- இப்படம்
இலங்கைக் காடுகளில்
படமாக்கப்பட்டதாம்!
Adults only

மொடேர்ண்
மினி சினிமா
ஸ்ரீலங்கா அச்சகலேன்
ராஜா தியேட்டருக்கு
அருகாமையில்
தினசரி 10-30, 2-30, 4-30
6-45 மட்டும்
The Wild
Geese
இன்றைய இளைஞர்
களின் தீவிர தாக்குதல்
களை ஒத்த தாக்குதல்
நிறைந்த படம்

சரவணபவன்
மினி சினிமா
(பெருமாள் கோவிலுக்
கும் - வெலிங்டன் சந்திக்
கும் இடையில்)
4 x 4 திரையில்
10-30, 2-30, மட்டும்
Private-Lessons
15 வயது பணக்கார சிறு
வனின் teen age ஆசை
களை பயன்படுத்தி பணம்
பறிக்க வேலைக்காரப்
பெண்ணைத் தூண்டும்
நன்றிமறந்த கார்ரைவர்
பாலியல் ஆசையைத்
தூண்டி சிறுவனைக் கெடு
க்கும் வேலைக்காரப் பெண்
ஏதும் அறியா கெடுக்கப்
பட்ட சிறுவன் வேலைக்
காரப் பெண்ணை மான
சீகமாக காதலிக்கும் விப
ரீதம் teen age வயதில்
இளைஞர்கள் செய்யும்
குறும்புகள்.
(கண்டிப்பாக வயது வந்
தோருக்கு மட்டும்)

குமரன்
மினி சினிமா
10-30, 2-30, 4-30, 6-30
Gods Gun
[War Film]
பயங்கர சண்டைகள்,
குதிரை ஓட்டங்கள்
நிறைந்த படம்

உஷா மினி
10-30 2-30, 4-45, 6-45
CODE NAME
WILD GEESE
மிக நவீன ஆயுதங்களு
டன் 5 கொமாண்டோக்
கள் கொண்ட கொரில்லா
கோஷ்டி இராணுவ
முகாம் மீது தாக்குதல்

## விமான விபத்தில் தப்பிய பணிப்பெண்

[கொழும்பு]

கடந்த திங்கட்கிழமை விபத்துக்குள்ளான ஜப்பானிய போயிங் 747 விமானம் விபத்துக்குள்ளாவதற்கு முன்னர், விமானத்தின் முதுகெலும்பு போலிருக்கும் கட்டுமானச் சட்டத்திற்கூடாக நீலவானத்தைப் பார்க்கக் கூடியதாக இருந்தது என்று விமானவிபத்திலிருந்து உயிர் தப்பிய 26 வயது நிரம்பிய ஜிம்மி ஒட்சியா என்ற விமானப் பணிப்பெண் கூறியுள்ளார். (பி)

## அடையாளம்

2-ம் பக்கத் தொடர்ச்சி)

காணப்பட்டுள்ளது.

இப் பெண் கோவில்குளத்தினைச் சேர்ந்த ரஞ்சி என இவரது பெற்றோர் அடையாளம் காட்டியுள்ளார்கள்.

இவரது மரணம் தொடர்பான விசாரணையை அதிகாரி ஆர். வி. வில்வராஜா நடத்தினார்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## யாழ். அபிவிருத்திச் சபை

# அறிவித்தல்

1985-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09-ம் திகதி காலை 10-00 மணிவரை யாழ். அபிவிருத்திச் சபை பிரதிச் செயலாளர் (நிர்வாகம், சட்டம், வேலை) அவர்களால் கீழே காட்டப்பட்ட வேலைகளுக்கு, பெருந்தெருக்கள் திணைக்களம், கட்டடத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் அரசாங்கத் திணைக்களங்கள்/கூட்டுத்தாபனங்களில் கீழ்க் காட்டப்பட்ட வேலைகளின் எதிரே காட்டப்பட்ட தொகைக்கு மேற்பட்ட தொகைக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சில்வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றையதினம் காலை 10-10 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் ஒப்பந்தக்காரரோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.

கேள்விக்காரர் வைப்புப் பணத்தையும் கிரயப் பணத்தையும் சம்பந்தப்பட்ட யாழ். அபிவிருத்திச்சபை உப அலுவலகத்தில் செலுத்துவதன் பெயரில் 1985-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 02-ம் திகதி நண்பகல் 12 00 மணிவரை சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களில் கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

| | யாழ். அபிவிருத்திச்சபை உப அலுவலகங்கள் | வேலையின் பெயர் | ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்ட தொகை (தகமை) | வைப்புப் பணம் | கிரயப் பணம் |
|---|---|---|---|---|---|
| (01) | நாரந்தனை | புளியங்கூடல் சந்தைக் கட்டடம் அமைத்தல் | 50,000/- | 50/- | 25/- |
| (02) | சுன்னாகம் | கொல்களம் அமைத்தலும் அதைச்சுற்றி சுவர் கட்டுதலும் | 50,000/- | 50/- | 25/- |
| (03) | செம்பியன்பற்று | நூல் நிலையக் கட்டடம் அமைத்தல் | 50,000/- | 50/- | 25/- |
| (04) | கிளிநொச்சி | நூல் நிலையக் கட்டடம் அமைத்தல் | 150,000/- | 75/- | 50/- |
| (05) | சொக்குவில் | நூல் நிலையம் அமைத்தல் | 125,000/- | 125/- | 25/- |
| (06) | கொக்குவில் | ஆடியபாதம் சந்தை அமைத்தல் | 40,000/- | 50/- | 25/- |
| (07) | நல்லூர் | நல்லூர் உப அலுவலகம் அமைத்தல் | 250,000/- | 200/- | 50/- |
| (08) | முள்ளிப்பற்று | 2 கடை அமைத்தல் | 30,000/- | 50- | 25/- |
| (09) | கச்சாய் | கொடிகாமம் சந்தைக்கட்டிடம் | 600,000/- | 500/- | 100/- |

அன்ரன் அல்பிரட்
(ஒப்பம்)
பிரதிச் செயலாளர் (நிர்.சட்.வே)
யாழ். அபிவிருத்திச் சபை.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
12 ஆகஸ்ட், 1985.

(64)

ரேயல் இண்டஸ்ரீஸ்
22 1/1, ஆதமலி பில்டிங்,
ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு-13.

கிளை : ரேயல் இண்டஸ்ரீஸ்—பொன்னையா லேன், வண்ணார்பண்ணை வடமேற்கு, ஆனைக்கோட்டை. போன்: 26679

அறிவித்தல் எமது வாடிக்கையாளர் கவனத்திற்கு

எங்கள் ஸ்தாபனத்தில் விற்பனைப் பிரதிநிதியாக விற்பனைசெய்துவந்த கோபால் இராசேந்திரன் என்பவர் ஒருவருடத்திற்கு முன்பே எமது ஸ்தாபனத்திலிருந்து விலகிவிட்டார். இப்போது எங்கள் ஸ்தாபன பெயரைச் சொல்லிக்கொண்டு, தனது ஸ்தாபன பொருள்களை விற்பனை செய்கிறார் என்பதை அறிந்தோம். அவருக்கும் எங்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதை எங்கள் அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம்.

தலைமைக் காரியாலயம் :
ரேயல் இண்டஸ்ரீஸ்
22 1/1, ஆதமலி பில்டிங்,
ஆட்டுப்பட்டித்தெரு,
கொழும்பு—13.

யாழ். கிளை :
ரேயல் இண்டஸ்ரீஸ்
பொன்னையா லேன்,
வண்ணார்பண்ணை (வடமேற்கு),
ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.

போலிகளைக் கண்டு ஏமாறாதீர்

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# மதவாச்சி மீது தாக்குதல் நடக்குமென மக்கள் அச்சம்!

(மதவாச்சி)

தீவிரவாதிகள் மதவாச்சியில் கடத்திச் செல்லப்பட்ட பஸ் ஒன்றுக்குள் பயங்கர வெடிகுண்டு காணப்பட்டதை தொடர்ந்து, மதவாச்சிமீது பெரும் தாக்குதல் இடம் பெறும் என மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

மதவாச்சி பகுதி முழுவதும் பதற்றநிலை நீடித்துவருகிறது. அடுத்த சில தினங்களுக்கிடையில் ஆயுதப்படையினருக்கும், தீவிரவாதிகளுக்குமிடையில் பலத்த மோதல் ஏற்படக் கூடிய சாத்தியக் கூறுகளை நிராகரிப்பதற்கில்லை எனக் கூறப்படுகிறது

பஸ்ஸில் கண்டெடுக்கப்பட்ட குண்டு பரிசிலனை செய்யப்பட்டபோது தம்பிப்பிள்ளை மகேஸ்வரனின் குழுவான தமிழ் ஈழ இராணுவத்தினுடையதென்ற தடயம் கிடைத்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்தக் குழுவினர் மதவாச்சி மாவட்டத்திலுள்ள பின் தங்கிய கிராமப்புறங்களான யக்கவ, சியம்பால கஸ்விவ பகுதிகளில் கடந்த ஒருவார காலமாக தீவிரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது

கடந்த புதன்கிழமை இரவு இக்குழுவின் உறுப்பினர்கள், இங்குள்ள ஒரு குடும்பத்தினரை துப்பாக்கி முனையில் பயமுறுத்தி 55,000 ரூபா பெறுமதியான நகைகளை கொள்ளையடித்து சென்றனராம்

அச்சத்தின் காரணமாக கிராமப் பகுதிகளிலுள்ள பெண்கள், வயல்களுக்குச் செல்லாமல் தங்கள் வீடுகளிலேயே தங்கியுள்ளார்கள். (ஈ)

## ரூ. 15 ஆயிரம் முள்ளியவளை தபால் நிலையத்தில் கொள்ளை

(முல்லைத்தீவு)

முள்ளியவளை தபால்நிலையத்தில் துப்பாக்கிமுனையில் 15,000 ரூபா ரொக்கப்பணம் கொள்ளையடிக்கப்பட்டது.

முல்லைத்தீவு தபால் நிலையத்திலிருந்து இப்பணம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது துப்பாக்கியுடன் வந்த 8 இளைஞர்கள் இக்கொள்ளையை நடத்தியதாக கூறப்படுகிறது.

இப்பணத்தில் விதவைகள் அநாதைகள் பணமும் இருப்பதால் பணத்தை உடன் ஒப்படைக்குமாறு தபால் நிலைய அதிபரும் ஊழியரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## வவனியா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நகரம் காலை 7 மணிக்குப் பின்னரும் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தது மக்கள் நடமாட்டம் இல்லை. வாகனங் ஓடவில்லை. துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்ற பகுதிகளில் முனகல் சத்தங்கள் கேட்ட வண்ணமிருந்தன மானிடசடலங்கள்ஆங்காங்கே சிதறுண்ட நிலையில் காணப்பட்டன.

வவனியா அந்தோனியார் கோவிலிலும், பாடசாலையிலும் ஆயிரக்கணக்கானோர் தஞ்சமடைந்தனர்.

வவனியா நகரில் கண்டி வீதிக்கு அண்மித்த வீடுகள், புதுக்குடியிருப்பு வாழ் குடிசைகள் வவனியா ஆஸ்பத்திரிக்குச் சூழவுள்ள தொழிலாளர் குடிசைகள் தீவைக்கப்பட்டன.

உயிர்ப்பிச்சை அளிக்குமாறு கோரி. வவனியா மாவட்ட சபை முன்னாள் உறுப்பினரும், மாவட்ட பிரஜைகள்குழுசெயலாளருமான டாக்டர் எஸ் வி. பரராஜசிங்கம், வவனியா பிரஜைகள்குழுத் தலைவர் திரு சொர்ணபாலாவும் ஜனாதிபதி மற்றும் தமிழ் அமைச்சர்கள், பாதுகாப்பு அதிகாரிகளுடன் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டவண்ணமிருந்தனர்

நேற்றிரவு 7 மணிக்குச் சற்று முன்னரே இராணுவத்தினர் சம்பந்தப்பட்ட இடங்களைவிட்டு முகாம்களுக்குத் திரும்பினராம்.

அரச கூட்டுத்தாபன தனியார் அலுவலகங்கள் கடைகள், மூடப்பட்டிருந்தன,

இதே நேரத்தில் இக்கண்ணிவெடிச்சம்பவத்தில் ஆயுதப்படையினருக்கோ அவர்களின் வாகனங்களுக்கோ எதுவித சேதமும் ஏற்படவில்லை என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. (மா)

## திருமலையிலிருந்து ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்படுகிறது. இதனைத் தொடர்ந்து தமிழ்மக்கள், குச்சவெளி, மூதூர் மற்றும் தூரத்தில் உள்ள கிராமங்களுக்குச் சென்றுள்ளனர்.

நூற்றுக்கு மேற்பட்டவர்கள் யாழ்ப்பாணம் சென்றுள்ளதாகவும் கூறப்படுகின்றது

ஏற்கனவே திருமலையிலிருந்து சென்ற சுமார் 8,000 தமிழ் மக்கள் மட்டக்களப்பில் தஞ்சமடைந்துள்ளார்கள்.

ஸ்ரீமாபுரத்தில் நேற்றுமுன்தினம் இனந்தெரியாதவர்களினால் டாக்ஸி ஒன்று கடத்தப்பட்டது.

பஸ்ஸில் கடத்தப்பட்ட 8 தமிழர்களில் 6பேர்பற்றிய தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்றும் அவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

காயமடைந்த மார்க்கண்டு, யோகேஸ்வரி ஆகிய இருவரும் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஈ)

## வீரகத்தி விநாயகர்

(நயினாதீவு)

நயினாதீவு செம்மணத்தம் புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை ஆலய முன்றலில், அறங்காவலர் சபைத் தலைவர் திரு சி. நா. மதியாபரணம் தலைமையில் நடைபெறும்.

## வரிசையாக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மலையகப் பெண்ணான உமா தேவி (30 வயது) தெரிவித்துள்ளார். இவர் கூலிவேலை செய்பவர்.

இவர் நேற்று ஆபத்தான நிலையில் வவனியா ஆஸ்பத்திரியிலிருந்து ஹெலிகொப்டர் மூலம் அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார்.

நேற்றைய சம்பவத்தில் படுகாயமடைந்தோர் விபரம் வருமாறு:

பி. பாலசிங்கம் (50 வயது), வவனியா விகாரைக்குப் பின்னால் உள்ள குடிசையில் வசிப்பவர். பரமேஸ்வரன் (54-வயது). வி. பொன்னம்பலம் (50 வயது), கணக்கப்பிள்ளை. இவர் கண்டி வீதியைச் சேர்ந்தவர். திருமதி செல்வரத்தினம் நடராசா (55 வயது) மலையகத்தைச் சேர்ந்த இவர் கூலிவேலை செய்பவர். எஸ். குலேந்திரன் [முப்பது வயது] நீர்ப்பாசன இலாகாவில் படம் வரைஞராகப் பணியாற்றுபவர்.

தோணிக்கல்லைச் சேர்ந்த மகாலிங்கம் (40 வயது) இவர் தனது மனைவியும் 4 பெண்பிள்ளைகளும் ஸ்தலத்திலேயேவைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கிறார்.

எஸ். பரமநாதன் [32 வயது] காரைநகரைச் சேர்ந்தவர். 'சிற்றி' அரிசி மில்லில் மனேஜராகக்கடமையாற்றும் இவர் வவனியா ஆஸ்பத்திரியிலிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு ரயில் மூலம் கொண்டுவரப்பட்டவர்.

நேற்று அதிகாலை மேற்படி மில் மதிலால் பாய்ந்து சென்றவர்கள் மில்லுக்குள் படுத்திருந்தவர்களை மிரட்டி எழுப்பி வரிசையாக நிற்கச் சொன்னதாகவும், பின்னர் தங்களைநோக்கி துப்பாக்கியால் சுட்டபொழுது என்ஜின் சாரதி ஏ. பொன்னையா (65 வயது] கெப்பிட்டிப் பொலவைச் சேர்ந்தவர்) மற்றும் மில்தொழிலாளி ஏ. தேவசகாயம் [70 வயது] (அல்லைப்பிட்டி], வி சுப்பையா [40 வயது] பூவரசங்குளம் லொறிசாரதி. ஆகியோர் மரணமானதாகவும் தெரிவிக்கிறார்.

வவனியா சர்வோதய இயக்கத்தின் அமைப்பாளர் மனைவி திருமதி கதிரமலையும் அவரது தாய் தந்தையும் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்கள்.

வவனியாவில் துப்பாக்கிச் சூட்டுக்குப்பலியானவர்களுள் 20 பேரின் சடலங்கள் மட்டுமே நேற்றுப்பிற்பகல்வரை இராணுவத்தினர் வவனியா ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 6 சிறுவர்களும் 4 பெண்களும் 8 ஆண்களும் இருவயோதிபர்களும் அடங்குவர்.

வவனியாவில் நேற்றுக் காலை இடம்பெற்ற சம்பவம் குறித்து மன்னார் முன்னாள் எம்.பி. திரு. எஸ். சூசைதாசன் ஜனாதிபதியின் கவனத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளார். [மா]

## ஓய்வூதியம் ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

திகதிகளில்)வழங்கப்பட இருந்த ஒய்வூதியம் தவிர்க்கமுடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக, வங்கி முகாமையாளர் அறிவித்துள்ளார்.

## எம். ஜி..

(1-ம்பக்கத்தொடர்ச்சி]

யில்; இலங்கைத் தமிழ் மக்கள்பிரச்னை குறித்து நான் மிகவும் கவலையடைந்திருக்கின்றேன். ஈழத்தமிழரின் பிரச்னை தான் எனது முதல் நம்பர் பிரச்னை. அது எப்படியும் அமைதியான முறையில் தீர்த்து வைக்கப்படும். திம்பு இதற்கு நிச்சயம் வழிவகுக்கும்'' என்று தமிழக முதல்வர் நம்பிக்கை தெரிவித்தார்.

## அறிவித்தல்

வேலணை கிழக்கில் மாதம் இருமுறை நடத்தப்படும் நண்பர்களுக்கான அதிஸ்ட லாபச் சீட்டின் (15-08-1985) 3-வது சீட்டிழுப்பின் போது வேலணையைச் சேர்ந்த S பாலசுப்பிரமணியம் (வேலணை நிக்காடோ கொம்பனி - சாரதி) அதிஸ்டசாலியாகத் (இல 12) தெரிவுசெய்யப்பட்டு உடன் ஆயிரம் வழங்கப்பட்டது.

M. துரைராசா, சசிகலா ஸ்ரோர்ஸ்,
(102) செல்வநாயகம் வீதி. வேலணை-2

## மரண அறிவித்தல்

### கா. ஜெகதீசன்

காலஞ்சென்ற கார்த்திகேசு மாஸ்ரரின் மகன் ஜெகதீசன் (அப்பு) 15-8-85 அன்று காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அதேதினம் நடைபெற்றன. உற்றார், உறவினர் நண்பர்களுக்குத் தனிப்பட்ட முறையில் அறிவிக்க முடியாமைக்கு வருந்துகிறோம். குடும்பத்தினர், வட்டுக்கோட்டை. (105)

## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா சோமசுந்தரம்

அளவெட்டி தெற்கு திருமதி நாகம்மா சோமசுந்தரம் காலமானார். இவர் காலஞ்சென்ற ஆசிரியர் சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், கணேசரத்தினம், அருணாசலம், திருமதி புனிதவதி விஜயரத்தினம், திலகவதி கதிர்காமசேகரம், சம்பந்தமூர்த்தி ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற விஜயரத்தினத்தினதும், கதிர்காமசேகரம், புஷ்பதேவி, மரகதம், யோகராணி ஆகியோரின் மாமியாரும் ஆவார். ஈமக்கிரியைகள் 17-8-85 சனிக்கிழமை (இன்று) பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சோ அருணாசலம்
அளவெட்டி. தெற்கு

107

## மரண அறிவித்தல்

### கதிரேசு சற்குருமணி

நயினாதீவைச் சேர்ந்த காலஞ்சென்ற கதிரேசு தம்பதிகளின் மகன் கதிரேசு சற்குருமணி காலமாகிவிட்டார். இவர் கலாநிதியின் அன்புக்கணவரும், கௌசல்யாவின் அன்புத் தந்தையாரும் திரு செல்லத்துரை, திருமதி இராசம்மா செல்லத்துரை ஆகியோரின் மருமகனும், சிவானந்தி, மகாதேவா, மகேஸ்வரன், மகாலங்கம், பவளம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், வரதகேயன் (தொலை தொடர்பு பரிசோதகர்), பாலகேயன் (சவுதி அரேபியா), மாலதி, சிவாநிதி, சுதாமதி, கேமாவதி, மகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நயினாதீவு வங்களாவடி 6-ம் வட்டாரத்திலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை தயவுசெய்து உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறோம்.

குடும்பத்தினர்

108

றெலக்ஸ் இன்டஸ்றீஸ் யாழ்ப்பாணம்

(Rolax Industries Jaffna)

பொது அறிவித்தல்

எமது ஸ்தாபனம் யாழ்ப்பாணத்தில் அல்லது கொழும்பில் வேறு எந்தவித ஸ்தாபனத்துடன் தொடர்போ, பங்கோ கொண்டிருக்கவில்லை என்பதை அறியத்தருவதுடன் எங்கள் ''றெலக்ஸ்'' (ROLAX தயாரிப்புகளுக்கு வருட காலத்திற்குமேல் ஒத்துழைப்பும், ஆதரவும் அளித்த பாவனையாளர்களுக்கும் - வியாபாரப் பெருமக்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எங்கள் உன்னத தயாரிப்புகள்:

★ றெலக்ஸ் பேக்கிங் பவுடர்
★ றெலக்ஸ் கஸ்ராட் பவுடர்
★ றெலக்ஸ் குளுக்கோஸ்
★ றெலக்ஸ் ஐசிங் சுகர்
★ றெலக்ஸ் ஜெலி கிறிஸ்டல்ஸ்

றெலக்ஸ் இன்டஸ்றீஸ்
( கோ. இராஜேந்திரன் )
222 A, கஸ்தூரியார் வீதி,
(ராதிகா ஜுவல்லர்ஸ் மேல்தளம்)
யாழ்ப்பாணம்.

(99)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் மேற்கு வீதி, 68ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 100236/81 Eelanadu P. Box 49, Telegram Eelanadu, Telephone; 22389 ,24126.